# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 06.11.2020 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 296/E/2020**

திரு.ஜான் லோபஸ் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் ஆய்வாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 17.10.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 22.11.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 06.01.2020 |

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (06.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.ஜான் லோபஸ் அவர்கள் தனது சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால்,

இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.வனராஜ், பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் ஆய்வாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 17.10.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சா.மெ2) துறையின் அரசு சார்பு செயலர், எண்.11725/தஅஉச/156/சா.மெ2/2019-1 நாள்.25.07.2019 என்ற கடிதத்தில் திரு.P.ராமமூர்த்தி என்பவர் Sameer Centre for Electro - Magnetics, Taramani-ல் பணிபுரிந்து வருவதாகவும், இவரது கோப்பின் மீது மேல்நடவடிக்கை தொடர வேண்டியிருப்பதால் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் தற்பொழுது உள்ள கோட்டாட்சியரின் அறிக்கை மற்றும் அசல் ஆவணங்களை அரசு கடித எண்.8883/சாமெ.3/2019-2 நாள்.29.05.2019 இல் கோரப்பட்டதாகவும், அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுவதால் இந்நேர்வு நாளது தேதியில் நிலுவையில் உள்ளது என்றும், இந்நேர்வில் அரசுக்கு திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அறிக்கை அனுப்பிவிட்டாரா என்ற விபரம், அவ்வாறு அறிக்கை அனுப்பியிருப்பின் அதன் நகல் வழங்கக்கோரியும், திண்டுக்கல் மாவட்டத்தில் மலை வேடன் இனத்தைச் சார்ந்த பழங்குடியினர் எத்தனை பேர் உள்ளன என்ற விபரம், இவர்களில் எத்தனை பேருக்கு கடந்த 15 ஆண்டுகளில் சாதிச்சான்று மெய்த்தன்மை உறுதி செய்யப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் உள்ளிட்ட 4 இனங்களில் தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 15.11.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 22.11.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 09.12.2019 மற்றும் 23.12.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிறகும் பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 06.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்களை 15 தினங்களுக்குள் வழங்குவதாக தொலைபேசி வாயிலாக வாக்குமூலமாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்தும், மேல்முறையீட்டாளருக்கு கூடுதலாக ஒரு வாய்ப்பளித்தும் விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் வாக்குறுதிப்படி முழுமையான தகவலினை அனுப்பிவைப்பதோடு, மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 17.10.2019 தேதியிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள தகவல் தொடர்புடைய பதிவேடுகள், கணினி நடவடிக்கைகள், ஆவணங்கள், கோப்புகள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ காட்சிகள் அடங்கிய CD அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள 17.10.2019 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள தகவலுக்கு மூ.மு.எண்.7745/2019/அ1, 15.11.2019 ஆம் தேதியிட்ட கடிதம் வாயிலாக ஒரு முறையற்ற தகவலை வழங்கிய சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் ஏன் ரூ.25000/- அதிகபட்ச அபராதம் விதிக்கலாகாது என்பதற்கும், சட்டப்பிரிவு 20(2)-ன்கீழ் துறைரீதியான நடவடிக்கைக்கு உயரதிகாரிகளுக்கு ஏன் பரிந்துரைக்கக்கூடாது என்பதற்கும் உரிய விளக்கத்தையும் பெற்று, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.

ஒம்/- ச.செல்வராஜ்
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப்பதிவாளர்.

**வழக்கு எண்.SA 296/E/2020**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் ஆய்வாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**மனுதாரர்**

திரு.ஜான் லோபஸ்,
எண்.16, குபேர முனுசாமி தெரு,
நங்கநல்லூர்,
சென்னை - 600 061.

Copy to: Judgement File.
*"VP / PA -10.11.2020"*